<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**</u>

<u>**அசல் வழக்கு எண். 47/2024**</u>

பெயர் : வேல்முருகன் த/பெ. துரைசாமிகவுண்டர் நாள் : 09.06.2026

<u>**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் 2019ல் ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்.517/2019 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கின் வழக்குரை என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த நீதிமன்றம் புதியதாக துவங்கப்பட்டதால் ஆள்வரை சம்பந்தப்பட்ட அ.வ.எண்.517/2019 வழக்கானது இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு மாற்றப்பட்டு இங்கு அ.வ.எண்.47/2024 ஆக தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது இந்த வழக்கு என்றால் சரிதான். நான் ஏற்கனவே இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.267/1998 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கின் தன்மையும், பரிகாரமும் வேறு ஆகும்.

2. மேற்படி நான் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்த வழக்கானது 29.07.1999 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்வு நகல் அ.வ.எண்.267/1998 என்ற வழக்கிற்குடையது என்றால் சரிதான்.**அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.வ.எண்.267/1998 வழக்கின் வழக்குரையை நான் வா.சா.ஆ.11 ஆக எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புரையை தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் அந்த வழக்கின் பரிகாரமும், தன்மையும் வேறு என்பதால் அதன் தீர்ப்புரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி அ.வ.எண்.267/1998 வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் எந்த தன்மை மற்றும் பரிகாரம் வேறுபட்டுள்ளது என்றால் அ.வ.எண்.267/1998 வழக்கில் வண்டிப்பாதையை பட்டா வண்டிப்பாதை என்று பிரதிவாதிகள் சொல்லியுள்ளதால் நான் வசதி உரிமையின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். இந்த தாவாவில் வண்டிபாதையானது அரசு பொதுப்பாதை என தெரிந்ததால் அந்த வண்டிபாதையை நான் உபயோகப்பதை தடுக்ககூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. அ.வ.எண்.267/1998 வழக்கில் பட்டா வண்டிப்பாதை என்று நான் சொன்னதில் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் ரீ.ச. 279/5ல் தெற்கு பகுதியில் கிழமேலாக உள்ள பொதுப்பாதை. இந்த வழக்கில் சொல்லியுள்ள வண்டிப்பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் ரீ.ச.279/5 ல் தெற்கு பகுதியில் கிழமேலாக உள்ள பொதுப்பாதை ஆகும். 2 வழக்குகளிலும் வண்டிப்பாதை ஒன்று தான் என்றால் சரிதான். 2 வழக்குகளிலும் வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒன்று தான் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள வண்டிப்பாதை 1998ல் தாக்கல் செய்த வழக்கில் பட்டா பூமி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், பிரதிவாதிகளும் பட்டா பூமி என்று எதிர் வழக்குரை செய்தார்கள். அ.வ.எண்.267/1998 வழக்கில் ரீ.ச. 279/5 வீட்டுமனைகள் அமைத்தும் பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்று சொல்லி தான் வழக்கு

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.06.09 17:44:15 +0530

தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிகள் அவர்களுடைய வீட்டுமனை என்று தான் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதிகளை தவிர இன்னும் ஒருவர் இறந்து போன ஜெகதீஸ்வரன் மற்றும் அத்தப்பகவுண்டர் ஆகிய நபர்களுக்கு வீட்டுமனை உரிமை உள்ளது.

4. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின்படி ரீ.ச.278/2 ன் பூமி பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப் பட்ட தீர்ப்புரையில் மேற்படி 2 ஆவணங்களிலும் வாதியோ, அவர்கள் முன்னோர்களோ அந்த நிலத்தின் வழியாகவோ எனது வீட்டிற்கு சென்றடைய தாவா தடத்தின் உபயோகிக்கும் உரிமை பற்றி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பக்கம் 4 ல் 7வது வரியில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 279/5 காலையில் தெற்கு ஓரமாக கிழமேலாக வரும் பொது வண்டிப்பாதையில் போகவரவுள்ள உரிமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது பக்கம் 2 ல் 23, 24 வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தை யார் எனக்கு ஏற்படுத்தி கொடுத்தார்கள் என்றால் எனது தந்தை எனக்கு ஏற்படுத்தி கொடுத்தார்.

5. 1982 க்கு முன்பு எனக்கு மேற்படி பகுதியில் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் தவறு. 278/2ல் எனக்கு சொத்து இருந்தது. 1982ல் தான் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. 1982க்கு முன்பு எனக்கு சர்வே எண்.278/2 பூமி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் உரிமையான சொத்து இல்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் வீடு இல்லை என்பதால் தான் வீட்டை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் வீட்டை பற்றி குறிப்பிடவில்லை என்பது உண்மை, ஆனால் 1969ல் கட்டப்பட்ட வீடு இருந்தது. அ.வ.எண்.267/1998 தீர்ப்புரையில் அந்த வழக்கின் தாவா வண்டிப்பாதை தனியார் வண்டிப்பாதை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் வசதியுரிமை படி பாத்தியப்பட்டது என்று கோரினோம் பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமானது என எதிர்வழக்குரை செய்தார்கள், இரண்டுமே தவறானது ஆகும்.

6. எந்த ஆவணத்தில் அடிப்படையில் சர்வே எண்.279/5ல் உரிமை வந்துவிட்டதாக நான் குறிப்பிடுகிறேன் என்றால் 1997 ல் என் அப்பா எழுதி செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையிலும், வட்டாட்சியர் பொதுப்பாதை என கொடுத்த RTI க்கு கொடுத்த மனுவின் அடிப்படையிலும் நான் உரிமை கோருகிறேன். 1998ல் நான் வழக்கு தாக்கல் செய்வதற்காகவே எனது தந்தை என் பெயருக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தினை ஏற்படுத்திக்கொடுத்ததாக நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரியல்ல. 278/2 பூமிக்கு செல்வதற்கு மாற்று வழி உள்ளதாக அ.வ.எண்.267/1998 வழக்கில் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாதல்ல ஆகும். அ.வ.எண்.267/1998 வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதில் 278/2ல் பூமிக்கு செல்ல மாற்றுபாதை உள்ளது என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த அறிக்கை தவறானதாகும்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.09 17:44:21 +0530

7. அ.வ.எண்.267/1998 வழக்கில் வாதியான நான் 278/2ல் பூமிக்கு செல்ல மாற்றுபாதை இல்லை என்ற வாதியின் கூற்றை நிராகரித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறானதாகும். அ.வ.எண்.267/1998 வழக்கில் தீர்ப்புக்கு எதிராக மாண்புமிகு ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன். அந்த வழக்கு A.S.No.198/1999 என்றால் சரிதான். 15.03.2000 ல் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கீழமை நீதிமன்ற தீர்ப்பினை உறுதிப்படுத்தி எனது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் சான்றிடப்பட்ட நகல் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேனா என்றால் 2001ம் ஆண்டு மேல்முறையீடு செய்தேன். அந்த வழக்கு எண். S.A.1393/2001 என்றால் சரிதான். அந்த வழக்கு எண். S.A.1393/2001 வழக்கின்உத்தரவு நகல் என்னிடம் காட்டப் படுவது தான். **அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

உணவு இடைவேளிக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

8. அ.வ.எண்.267/1998 வழக்கின் வழக்குரையை தாக்கல் செய்துவிட்டு அதன்பின்னிட்டு நீதிமன்றம் வழங்கப்பட்ட தீர்ப்புரைகளை தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் அந்த வழக்கின் தன்மை வேறு, இந்த வழக்கின் தன்மை வேறு என்பதால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு இருக்கும் நிலையில் வழக்குரையை மட்டும் ஏன் தாக்கல் செய்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 2வழக்குகளும் ஒன்று தான் தான் தப்பித்து கொள்வதற்காக ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் தாய் பத்திரம் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 21 வதுவரியில் நான் வாங்கிய 50 சென்ட் சொத்திற்கு செக்குப்பந்தி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. அதில் பழனிசாமி பாகத்திற்கு கிழக்கு, கோப்பு வாய்க்காலுக்கும் வடக்கு, க.ச. 1291 காலைக்கும் தெற்கு, இதன்மத்தியில் பு.ஏ.0.50 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.279/5க்கு பழைய க.ச.1291 என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பழைய க.ச. 1291 க்கு தெற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வண்டித்தடத்திற்கு தெற்கு என எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு தான் எனது தந்தை வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்படாத வண்டித்தடத்தை வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லப் பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. அ.வ.எண்.267/1998 வழக்கில் இந்த வழக்கில் தாக்கல் செய்த வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான காரணம் என்ன என்றால் அப்போது இந்தியன் வங்கியில் வா.சா.ஆ.1 ஆவணத்தை அடமானம் வைத்து கடன் பெற்றதால் தாக்கல் செய்ய இயலவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வண்டித்தடத்தை பற்றி குறிப்பிடாததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் மாமூல் வண்டிப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அரசு பொதுப்பாதைக்கு சர்வே எண் குறிப்பிடாமல் மாமூல் வண்டிப்பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.09 17:44:26 +0530

11. நான் 2வது மேல்முறையீடு S.A.1393 என்ற வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து 18 ஆண்டுகள் கழித்து 2019ல் இருதரப்பு வாதங்களுக்காக வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் 2வது மேல்முறையீட்டு வழக்குஇறுதி முடிவினை எட்டும் நிலையில் சி.எம்.பி.16461/2019 என்ற மனுவும், மற்றொரு மனுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. அதில் ஒரு மனுவில் 2வது மேல்முறையீட்டு வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். ஏனென்றால் அரசு பொதுப்பாதை என்று தெரியவந்ததால் திரும்ப பெற்றுக்கொண்டேன். அரசு பொதுப்பாதையின் சர்வே எண் என்ன என்றால் அதற்கு உட்பிரிவு எதுவும் இல்லை. நான் வழக்கை திரும்ப பெறும் போது மனுவில் என்ன சர்வே எண்ணை குறிப்பிட்டேன் என்றால் ரீ.ச.279/5 ல் தென்பகுதியில் கிழமேலாக செல்லும் அரசு பொதுபாதை என தெரியவந்ததால் வாபஸ் பெறுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன்.

12. நான் 2வது மேல்முறையீட்டு வழக்கில் அ பதிவேடு மற்றும் FMB ல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுவது மேற்படி மனுவின் நகல் என்று சொன்னால் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த மனுவை வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டுள்ளதால் ஆட்சேபனை தெரிவித்தார், மேற்படி ஆட்சேபனையின் முடிவானது வழக்கு முடிவின்போது தீர்மானிக்கப்படும்).** ஆனால் இந்த மனுவா என்று ஞாபகம் இல்லை. மேற்படி மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை தான் இந்த வழக்கில் வா.சா.ஆ.4,5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

13. வா.சா.ஆ.4,5 ஆவணத்தை தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக மனு தாக்கல் செய்து பெறப்பட்டது என்றால் சரிதான். தகவல் அறியும் சட்டத்தின்படி நான் கேட்டதற்கு கொடுக்கப்பட்ட பதிலானது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் இல்லை. மேற்படி மனுவில் சர்வே எண்.279/11,12,13,14,15ல் செல்வதாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் வழக்குரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3வது ஆவணமான குறிப்பிடப்பட்டுள்ள மொடக்குறிச்சி பொது தகவல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பதில் 27.08.2019 தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த ஆவணத்தை வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவித்தார், மேற்படி ஆட்சேபனையின் முடிவானது வழக்கு முடிவின்போது தீர்மானிக்கப்படும்).**

14.மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது எனது வழக்கறிஞர் சி.எம்.பி.7508/2019 என்ற மனுவை தாக்கல் செய்து 2வது மேல்முறையீட்டை வாபஸ் பெற அனுமதி கோரினார் என்றால் சரிதான். அவ்வாறு மனு தாக்கல் செய்வதற்கு 29.07.2019ம் தேதியன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதிக்கப்பட்ட உத்தரவு என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் தீர்ப்பானது 2வது மேல்முறையீடு தீர்ப்பு வழங்கும் போது சி.எம்.7508 மற்றும் 16461 ஆகிய இரண்டு மனுக்களும் சேர்த்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். **அது**

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.06.09 17:44:31 +0530

**பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கில் தாவா சொத்து ரீ.ச.எண்.279/11,12,13,14,15 என்று சொன்னால் தவறு, ரீ.ச.279/5 ல் தென்புறத்தில் கிழமேலாக செல்லும் வண்டிப்பாதை தான் தாவா சொத்து.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.09 17:44:35 +0530